
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 227 | 4 Pages | 15.3.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 227 | 4 பக்கங்கள் | 15.3.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல**

**விளக்கம்:**
**அறிவில்லாதவர் ஒரு வேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை.ஆனால்வீணில்எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல, மிகப்பல எண்ணங்கள்.**

## அணு ஆயுதங்களை நிலைநிறுத்த அமெரிக்காவுக்கு அழைப்பு விடுத்த போலந்து அதிபர்



வார்சா, மார்ச்.15

உக்ரைன் மற்றும் ரஷியா இடையிலான போர் சுமார் 3 ஆண்டுகளாக நீடித்து வரும் சூழலில், தங்கள் நாட்டிற்கும் அணு ஆயுத பாதுகாப்பு தேவை என 'நேட்டோ' நாடுகளில் ஒன்றான போலந்து வலியுறுத்தியுள்ளது.

உக்ரைன், பெலாரஸ் மற்றும் ரஷியாவின் கலினின்கிராட் ஆகியவற்றுடன் போலந்து தனது எல்லையை பகிர்ந்து கொள்கிறது. இந்நிலையில், ரஷியாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தங்கள் நாட்டில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்த வேண்டும் என அமெரிக்காவுக்கு போலந்து அதிபர் ஆண்ட்ரேஜ் டூடா அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னதாக கடந்த 2022ம் ஆண்டு அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோ பைடனிடம் இதே கோரிக்கையை ஆண்ட்ரேஜ் டூடா முன்வைத்திருந்தார். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தற்போது பிரான்ஸ் மட்டுமே அணு ஆயுதங்களை கொண்டுள்ளது.

சமீபத்தில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், ரஷியாவின் அச்சுறுத்தல்களில் இருந்து ஐரோப்பிய நாடுகளை பாதுகாக்க பிரான்ஸ் நாட்டின் அணு ஆயுத சக்தியை பயன்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாக பிரான்ஸ் அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கடந்த வாரம் போலந்து பிரதமர் டொனால்டு டஸ்க் தெரிவித்தார். இந்த முடிவு மோதலுக்கு வழிவகுக்கும் என ரஷியா விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ரெயிலை கடத்திய பயங்கரவாதிகளிடம் இருந்து பயணிகளை மீட்டது எப்படி? பாகிஸ்தான் ராணுவம் கூறிய திக்..திக்..அனுபவம்




குவெட்டா, மார்ச்.15

பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானின் எல்லையில் அமைந்துள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் கிளர்ச்சி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த கிளர்ச்சி குழுக்களை சேர்ந்தவர்கள் பலுசிஸ்தானை தனிநாடாகஅறிவிக்கக்கோரிஅரசுக்கு எதிராக தொடர்வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக பாகிஸ்தான் அரசால் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட பலுசிஸ்தான் விடுதலை ராணுவம் (பி.எல்.ஏ.) சமீபகாலமாகபல்வேறுபயங்கரவாததாக்குதல்களைநடத்திவருகிறது.

இந்த நிலையில் பலுசிஸ்தானின் தலைநகர் குவெட்டாவில் இருந்து கைபர்பக்துங்வா மாகாணத்தின் தலைநகர் பெஷாவருக்கு நேற்று காலை எக்ஸ்பிரஸ் ரெயில் ஒன்று புறப்பட்டது. 9 பெட்டிகளை கொண்ட ரெயிலில் சுமார் 500 பயணிகள் இருந்தனர்.

பலுசிஸ்தானின் போலன் மாவட்டத்தில் குடாலார் மற்றும் பிறுகோனேரி நகரங்களுக்கு இடையே சென்று கொண்டிருந்தபோது பயங்கரவாதிகள் சிலர் ரெயில் டிரைவரை துப்பாக்கியால் சுட்டனர். இதில் டிரைவர் காயமடைந்ததை அடுத்து, ரெயில் ஆள்அரவமற்ற பகுதியில் நின்றது. அதன் பின்னர் பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டவாறு ரெயிலில் ஏறினர். பின்னர் ரெயிலில் பயணம் செய்த பாதுகாப்பு படையினர் உள்பட 440 பயணிகளை பிணைக்கைதிகளாக பிடித்தனர்.

இதனையடுத்து 2 நாட்களாக பயங்கரவாதிகளுடன் பாதுகாப்பு படையினர் நடத்திய சண்டை நேற்று மாலை முடிவுக்கு வந்தது. 346 பிணைக்கைதிகளும் மீட்கப்பட்டனர் என்றும், 33 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. 21 பயணிகள், 4 பாதுகாப்பு படையினரை பயங்கரவாதிகள் கொன்றதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்தது. சுமார் 30 மணி நேரம் கடுமையாக போராடி பயங்கரவாதிகளிடம் இருந்து பிணைக்கைதிகளை பாகிஸ்தான் ராணுவம் பத்திரமாக மீட்டது. ரெயில் கடத்தப்பட்டதுமே நடவடிக்கையில் ராணுவம் களம் இறங்கியது. ஆனால் ரெயில் கடத்தப்பட்ட இடம் மலைப்பகுதி என்பதாலும், பயணிகளை பயங்கரவாதிகள் மனித கேடயங்களாக பயன்படுத்தியதாலும் மீட்பு பணியை கவனமாக மேற்கொண்டனர். இதில் பாகிஸ்தான் ராணுவம் சிறப்பு சேவை படை, விமானப்படை, ஆகியவை ஈடுபட்டன. இதில் பிணைக்கைதிகள் ஒவ்வொரு குழுவாக மீட்கப்பட்டனர்.

ரெயிலை கடத்திய பயங்கரவாதிகளிடம் இருந்து பயணிகளை மீட்டது எப்படி? என்று ராணுவத்தின் கடைசி திக் திக் அனுபவத்தை கூறியுள்ளார்ராணவ செய்தி தொடர்பாளர்அகமது ஷெரிப். இது குறித்து அவர் கூறியதாவது:

பிணைக்கைதிகளை மனித கேடயங்களாக பயங்கரவாதிகள் பயன்படுத்தினர். இதனால் அவர்களை மீட்கும் நடவடிக்கைக்கு அதிக நேரம்ஆனது.முதலில்ரெயிலில்தற்கொலைப்படைபயங்கரவாதிகளை துப்பாக்கி சுடும் வீரர்கள் சுட்டுக்கொன்றனர். பின்னர் ஒவ்வொரு ரெயில் பெட்டியிலும் ஏறி பயங்கரவாதிகளுடன் சண்டையிட்டனர். இந்த நடவடிக்கையின்போது பயணிகள் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. பயணிகளை தவிர பயங்கரவாதிகள் மனித கேடயங்களாக பயன்படுத்தியதால் இந்த நடவடிக்கை மிகவும் துல்லியமாகவும் எச்சரிக்கையுடனும் நடத்தப்பட்டது.

பயங்கரவாதிகள் ஆப்கானிஸ்தானில் உள்ள கூட்டாளிகளுடன் செயற்கைகோள் தொலைபேசிகள் மூலம் தொடர்பில் இருந்தனர். ரெயில் கடத்தப்பட்ட சில பயணிகள் அங்கிருந்து தப்பி வெவ்வேறு திசைகளில் ஓடி உள்ளனர். அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. பயங்கரவாதிகளும் அவர்களுக்கு உதவியர்களும் எங்கிருந்தாலும் வேட்டையாடப்படுவார்கள் என்றார்.

# எதிர்கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும் பட்ஜெட்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச்.15

தமிழகசட்டசபைபட்ஜெட்கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. சட்டசபையில் இன்றுகூடிய முதல் நாள் கூட்டத்தில் 20252026ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை (பட்ஜெட்) நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். அதில், கலைஞர் கைவினை திட்டத்தில், 19,000 கைவினைஞர்களுக்கு மானிய நிதியாக ரூ.75 கோடி ஒதுக்கீடு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்துக்கு ரூ.13,807 கோடி ஒதுக்கீடு, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை ரூ.120 கோடி செலவில் தரம் உயர்வு, மகளிர் விடியல் பயண திட்டத்திற்கு ரூ.3,600 கோடி ஒதுக்கீடு. ரூ.600 கோடி ஒதுக்கீட்டில், நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.





மேலும் 202526 நிதியாண்டில் மாநில அரசு ரூ.1.62 லட்சம் கோடிக்கு மொத்தக் கடன் பெறத் திட்டம். அதேவேளையில் ரூ.55,844 கோடி பொதுக்கடனை அரசு திரும்பச் செலுத்தும். 2026 மார்ச் 31ம் தேதிப்படி தமிழ்நாடு அரசின் நிலுவையில் உள்ள கடன் ரூ.9.29 லட்சம் கோடியாக இருக்கும். எனினும், மாநில ஜி.டி.பி. மதிப்பில் இது 26.07% ஆகும். சீரிய நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனை தக்கவைக்க அரசு திட்டமிட்டிருப்பதாக பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழக பட்ஜெட் குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

★ மகளிர் நலன் காக்கும் மாபெரும் திட்டங்கள்
★ ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம்
★ இளைஞர்களுக்கு உலகை வெல்லும் உயர்தொழில்நுட்பம்
★ தமிழ்நாடெங்கும் வேலை வாய்ப்புகளை அள்ளித்தரும் தொழிற்பூங்காக்கள்
★ புதிய நகரம்
★ புதிய விமான நிலையம்
★ புதிய நீர்த்தேக்கம்
★ அதிவேக ரெயில் சேவை

என நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிடும் முன்முயற்சிகள்! விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் தாயுமானவரின் கரங்கள் என அனைவருக்குமான திட்டங்கள் பல இன்று அறிவிக்கப்பட்டுள்ளன. 'எல்லோர்க்கும் எல்லாம்' எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைத்திருக்கிறது தமிழ்நாடு பட்ஜெட் 2025. நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் வாழ்த்துகள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வெற்று அறிவிப்பு; விளம்பர பட்ஜெட் எடப்பாடி பழனிசாமி விமர்சனம்

சென்னை, மார்ச்.15

தமிழக சட்டசபையின் பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று தொடங்கியது. சட்டசபையில் இன்று கூடிய முதல் நாள் கூட்டத்தில் 20252026ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை (பட்ஜெட்) நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தமிழக பட்ஜெட் குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:



பெட்ரோல், டீசல் விலையைக் குறைப்பதாக அறிவித்தனர்; அந்த அறிவிப்பு என்ன ஆனது?. ஆட்சிக்கு வந்ததும் பெட்ரோல் ரூ.3 குறைக்கப்பட்டது; ஆனால் டீசல் விலை குறைக்கப்படவில்லை. பெட்ரோல்,டீசல்விலைகுறைப்பு குறித்து எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை. பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டவை அதிமுகவின் திட்டங்கள்.

மாதம்தோறும் மின் கட்டணம் செலுத்தும் முறை குறித்து பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை. ரேஷனில் 1 கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்கப்படும் என்ற வாக்குறுதி என்ன ஆனது?. நீட் தேர்வு ரத்து, அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியம் , கல்வி கடன் ரத்து குறித்த எந்த அறிவிப்பும் இல்லை. 100 நாள் வேலை திட்ட ஊதியத்தை உயர்த்துவதாக தெரிவித்தார்கள் இடம் பெறவில்லை. நெல், கரும்புக்குகுறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்துவதாக தெரிவித்திருந்தனர், இடம்பெறவில்லை

சமையல் எரிவாயு மானியம் வழங்குவதாக தெரிவித்தனர், அதுவும் இடம்பெறவில்லை. புதிய பேருந்துகள் வாங்க ரூ.3,000 கோடி என்பது வெற்று அறிவிப்பு. அரசு பணியிடங்களை நிரப்புவதாக தேர்தல் வாக்குறுதி அளித்தனர். ஆனால் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 50,000 அரசுப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன; ஓராண்டில் 40,000 இடங்களை நிரப்ப முடியுமா?. விளம்பரத்தை மட்டுமே முன்னிலைப்படுத்தி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி நடத்தி வருகிறார்.

2026 தேர்தலில் வாக்குகளை பெறுவதற்காக அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர். தமிழ்நாடு கடனில் தத்தளிக்கிறது; ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி இல்லை; நடைமுறையில் பல திட்டங்களுக்கே கடன் வாங்கித்தான் திட்டத்தை செயல்படுத்த வேண்டிய நிலை உள்ளது. நிர்வாகத் திறமையற்ற அரசு நடக்கிறது என்பதே எதார்த்த உண்மை. அதிக கடன் வாங்குவதில் முதல் மாநிலமாக தமிழகம் இருக்கும் நிலையில் எப்படி புதிய திட்டங்களை செயல்படுத்துவார்கள்?. பட்ஜெட் அறிவிப்பு, வெறும் வெற்று அறிவிப்பாகத்தான் உள்ளது; இது ஒரு விளம்பரபட்ஜெட். இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களில் இதுவரை 4,288 நபர்கள் மருந்துகள் வாங்கி பயனடைந்த பயனாளிகள் முதலமைச்சருக்கு நன்றி

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனியார் மருத்துவமனைகளுக்கு செல்லும் பொதுமக்கள் தங்களுக்கான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாலும், நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதாலும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதை கருத்திற்கொண்டு "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்களை கடந்த 24.02.2025அன்று தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

முதல்வர்மருந்தகம்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில்முனைவோர் சார்பில் 500 மருந்தகங்களும், கூட்டுறவுத் துறை சார்பில் 500 மருந்தகங்களும் என மொத்தம் 1000 மருந்தங்கள் முதற்கட்டமாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், B.Pharm/D.Pharm படித்த பட்டதாரிகள் 1000 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

முதல்வர் மருந்தகங்களில் பொதுமக்களுக்கு தேவையானதரமான மருந்துகள் சந்தை மதிப்பைக்காட்டிலும் 75% குறைந்த விலையில் கிடைக்கிறது. முதல்வர் மருந்தகங்களில் ஜெனரிக், பிரான்டட் மருந்துகளும், சித்தா, ஆயுர்வேதம், யுனானி மருந்துகள் மற்றும் சர்ஜிகல் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து மருந்துகளும் 25% வரைதள்ளுபடி விலையிலும் கிடைக்கிறது. மேலும், 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களில் இதுவரை 4,288 நபர்கள் மருந்துகள் வாங்கி பயனடைந்துள்ளனர்.

எனவே, பொதுமக்கள் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு தங்களுக்கு தேவையான மருந்துகளை மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களின் வாயிலாக குறைந்த விலையில் பெற்று பயனடையலாம்.

முதல்வர் மருந்தகங்கத்தில் மருந்துகள் வாங்கி பயனடைந்த திருமோகூர் கிராமத்தை சார்ந்த திருமதி.ராஜம்மாள் அவர்கள் தெரிவித்ததாவது:

என் பெயர் ராஜம்மாள். நான் திருமோகூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 58 வயதாகிறது. நான் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வருகிறேன். எனக்கு 1 மாதத்திற்கு மருந்துகள் வாங்குவதற்கு குறைந்தது 3 ஆயிரம் ரூபாய் செலவாகும். எங்கள் குடும்பம் வறுமையில் உள்ளதால் என்னால் மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய்க்கு மருந்துகள் வாங்குவதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தேன். தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தில் மருந்துகள் வாங்கியதில் இந்த மாதம் எனக்கு ரூபாய் 1500 வரை சேமிப்பு ஏற்பட்டுள்ளது. என்னைப் போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய சூழ்நிலையில் உள்ளவர்கள் பயனடையும் வகையில் 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொகுப்பு**
**இ.சாலி தளபதி எம்.ஏ., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**
**ம.கபிலைச் செல்வம், பி.இ., உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), மதுரை.**

# சோகண்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.74.5 லட்சத்தில் கூடுதல் பள்ளி கட்டிடம்: திருப்போரூர் எம்எல்ஏ திறந்து வைத்தார்



திருக்கழுக்குன்றம், மார்ச்.15

திருக்கழுக்குன்றம் அடுத்த சோகண்டி கிராமத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளிசெயல்பட்டு வருகிறது.

இப்பள்ளிக்கு, கூடுதல் கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று திருப்போரூர் எம்எல்ஏ எஸ்.எஸ்.பாலாஜியிடம், அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கையை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.74.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சோகண்டி கிராமத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு 4 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் பள்ளி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, அதன் திறப்பு விழா நடந்தது.

சோகண்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜெயந்தி சரவணன் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக திருப்போரூர் எம்எல்ஏ எஸ்.எஸ்.பாலாஜி கலந்து கொண்டு, ரூ.74.50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டிடத்தை ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் உதயகுமார், கலாம் ஐஏஎஸ் அகாடமி நிறுவனர் ஸ்ரீராம், மாவட்ட கவுன்சிலர் ஆர்.கே.ரமேஷ், திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் செல்வக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனாட்சி, பாஸ்கரன், விசிக ஒன்றிய செயலாளர் திருமணி சதீஸ், நகர செயலாளர் செந்தில், பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மாசி பவுர்ணமியை முன்னிட்டு தலசயன பெருமாள் கோயில் தெப்போற்சவம்



மாமல்லபுரம், மார்ச்.15

மாமல்லபுரம் பேருந்து நிலையம் அருகே தலசயன பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது. மேலும், 108 திவ்ய தேசங்களில் 63வது திவ்ய தேசமாகவும் திகழ்ந்து வருகிறது. இக்கோயிலுக்கு, சொந்தமான புண்டரீக புஷ்கரணி தெப்பக்குளம் கடற்கரை கோயில் செல்லும் வழியில் உள்ளது. இக்குளத்தில் ஆண்டுதோறும் மாசி பவுர்ணமி அன்று தெப்ப உற்சவமும், மறுநாள் கடற்கரையில் தீர்த்தவாரி நிகழ்ச்சியும் நடைபெறுவது வழக்கம்.

இந்நிலையில், நேற்று இரவு தலசயன பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் தெப்பத்தில் எழுந்தருளி 3 சுற்றுகள் சுற்றி வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இதில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேங்காய் உடைத்தும், கற்பூரம் ஏற்றியும் கோவிந்தா கோவிந்தா கோஷத்துடன்சாமிதரிசனம்செய்து வழிபட்டனர்.

விழாவுக்கான, ஏற்பாடுகளை தலசயன பெருமாள் கோயில் நிர்வாகம் மற்றும் வியாபாரிகள் தெப்ப உற்சவ கமிட்டியினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# சுயமரியாதை என்ற வார்த்தை அதிமுகவினருக்கு பிடிக்காது: அமைச்சர் பி.கே சேகர்பாபு பேட்டி



அம்பத்தூர், மார்ச்.15

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி, அம்பத்தூர் அத்திப்பட்டு ஐசிஎப் காலனியில் உள்ள நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில், அன்னம் தரும் அமுதக்கரங்கள் என்ற பெயரில், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு, நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், ''ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதான்திமுகவினருக்கு நற்சான்றிதழை தான் அளித்துள்ளார், என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார். ஒன்றிய அரசுக்கு துதி பாடுவது, பாரதிய ஜனதாவிடம் கட்சியை முழுமையாக அடமானம் வைத்திருக்கிறஜெயக்குமார்போன்ற அதிமுகவினருக்கு சுயமரியாதை என்பது அறவே பிடிக்காத ஒன்று. இது போன்ற துதி பாடுபவர்களின் கேள்விகளுக்கு பதில் கூறும் நிலைமையில் நாங்கள் இல்லை.

ஒன்றிய அரசுக்கு சிம்மசொப்பனமாக திகழ்கின்ற எங்களுடைய நடவடிக்கையை மக்கள் முழுமையாக ஏற்றுள்ளார்கள்,'' என்றார். இந்நிகழ்ச்சியில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், அம்பத்தூர் மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, பகுதிசெயலாளர்டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், 86வது வார்டு கவுன்சிலர் கமல், மருத்துவர் சாந்தகுமாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அங்கம்பாக்கம் நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு: மாணவர்கள் மஞ்சள் பைகளை பொதுமக்களுக்கு வழங்கினர்




காஞ்சிபுரம், மார்ச்.15

அங்கம்பாக்கம் நடுநிலைப் பள்ளியின் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாணவர்கள் மஞ்சள் பைகளை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். சுற்றுப்புறச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு மிகத் தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கப்புகள், டம்பளர்கள் ஆகியவற்றை உற்பத்தி மற்றும் விற்பனைக்குதடைவிதித்து அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும், தமிழக அரசு சார்பில் மீண்டும் ''மஞ்சள் பை'' திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். கடைகளுக்கு செல்லும்போது வீட்டில் இருந்து பைகளை கொண்டு செல்ல வேண்டும், என்றும் அரசு சார்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதையடுத்து, பொதுமக்கள் மஞ்சள் பைகளை வெகுவாக பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அங்கம்பாக்கத்தில் நடுநிலைப்பள்ளியில் செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியின் சுற்றுச்சூழல் மன்றத்தின் சார்பில் பிளாஸ்டிக் பைகள் தவிர்த்தல் குறித்தும் துணிப் பைகளை பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில், சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து அன்றாட பயன்பாட்டிற்கு துணிப் பைகளை பயன்படுத்த வேண்டும், என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, 50 பொதுமக்களுக்கு மஞ்சள் பைகளை மாணவர்கள் வழங்கினர். அப்போது, கடைகளுக்கு செல்லும் போது வீட்டில் இருந்து துணிப் பைகளை எடுத்துச்செல்வோம், கடைகளில் பிளாஸ்டிக் பைகளை அவசியமின்றி கேட்டு வாங்க மாட்டோம், என்றும் பொதுமக்கள் உறுதியளித்தனர். இந்நிகழ்வில் அறிவியல் ஆசிரியர் சேகர் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சாலை தடுப்புச்சுவரில் மோதி விபத்து தனியார் தொழிற்சாலை பேருந்து கவிழ்ந்து 10 பெண்கள் படுகாயம்: சுங்குவார்சத்திரம் அருகே பரபரப்பு

ஸ்ரீபெரும்புதூர், மார்ச்.15

சுங்குவார்சத்திரம் அருகே சாலை தடுப்புச்சுவரில் தனியார் தொழிற்சாலை பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில், 10 பெண் பணியாளர்கள் படுகாயமடைந்தனர். இதனால், அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம் பகுதியில் செல்போன் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தனியார் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இங்கு, 1000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில், வேலூரில் இருந்து 40க்கும் மேற்பட்ட பணியாளர்களை ஏற்றிக் கொண்டு, தொழிற்சாலை பேருந்து ஒன்று சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை வழியாக சுங்குவார்சத்திரம் நோக்கி நேற்றுமதியம்வந்துகொண்டிருந்தது. அப்போது, பிள்ளைசத்திரம் பகுதியில் சர்வீஸ் சாலையில் இருந்து, தேசிய நெடுஞ்சாலைக்கு பேருந்தை இயக்கியபோது, திடீரென்று சாலையின் தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.


இதில், பேருந்தின் 2 முன் சக்கரங்களும் தனியாக கழன்றது. இதனைகண்ட, சக வாகன ஓட்டிகள் 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு தகவல் தெரிவித்தனர். மேலும், விபத்தில் படுகாயமடைந்த 10க்கும் மேற்பட்ட பெண் பணியாளர்களை மீட்டு சந்தவேலூர் பகுதியில் உள்ள அரசு அவசர சிகிச்சை மையத்திற்கு அனுப்பிவைத்தனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பேருந்து விபத்து குறித்து சுங்குவார்சத்திரம் போலீசார், விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இலவச கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச்.15

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இலவச கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம் என சாலை போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது. சாலை போக்குவரத்து நிறுவனமும், தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இலவசமாக கீழ்கண்ட 16 மையங்களில் ஆண், பெண் இருபாலருக்கும், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளித்து, ஓட்டுநர் உரிமம் இலவசமாக பெற விண்ணப்பங்கள், வரவேற்கப்படுகின்றன. கும்மிடிப்பூண்டி, விழுப்புரம், வேலூர், திருச்சி, கும்பகோணம், காரைக்குடி, புதுக்கோட்டை, சேலம், பொள்ளாச்சி, ஈரோடு, திருநெல்வேலி, நாகர்கோயில், மதுரை, திண்டுக்கல், தருமபுரி, விருதுநகர் ஆகிய 16 இடங்களில் பயிற்சி அளிக்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு கீழ்கண்ட தகுதிகள் மட்டுமே இருத்தல் வேண்டும். 20 வயதிற்கு மேல் இருக்க வேண்டும். இலகுரகவாகன உரிமம் பெற்று ஓர் ஆண்டு நிறைவடைந்திருக்க வேண்டும். பிஎஸ்வி பேட்ஜ் எடுத்திருக்க வேண்டும். இந்த இலவசபயிற்சியில் சேர விரும்புவோர் < *https://candidate.tnskill.tn.gov.in/skill wallet/* > என்ற இணையதளமுகவரியில் உள்நுழைந்து பாடதிட்டத்தை தேர்ந்தெடுத்து விண்ணப்பிக்கலாம்.

# பொன்.மாணிக்கவேல் மீதான வழக்கு விசாரணைக்கு தடை: ஐகோர்ட் கிளை உத்தரவு



மதுரை, மார்ச்.15

பொன்.மாணிக்கவேல் மீதான சிபிஐ வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது. தமிழக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஓய்வுபெற்ற டிஎஸ்பி காதர்பாட்ஷா "சிலை கடத்தல் வழக்கின் முக்கியக் குற்றவாளியை தப்ப வைக்க ஓய்வுபெற்ற ஐ.ஜி.பொன். மாணிக்கவேல் முயன்றார். இதற்கு இடையூறாக இருந்த என் மீது வழக்கு பதிவு செய்தார், எனவே அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்க உத்தரவிட வேண்டும்" என்று ஐகோர்ட்டில் மனு செய்திருந்தார். இதையடுத்து ஐகோர்ட் உத்தரவின்படி சிபிஐ முதல்கட்ட விசாரணை நடத்தி, பொன் மாணிக்கவேல் மீது வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில் ஐகோர்ட் கிளை, பொன். மாணிக்கவேலுக்கு முன் ஜாமீன் வழங்கியது. இது தொடர்பாக ஓய்வு ஐஜி பொன். மாணிக்கவேல், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், தன் மீதான வழக்கில் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்த முதல்கட்ட விசாரணை அறிக்கையின் நகலை வழங்க உத்தரவிட வேண்டும். மேலும் சிபிஐ பதிந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கூறியிருந்தார். இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி பிறப்பித்த உத்தரவில், முதல்தகவல் அறிக்கை, போதிய விபரங்கள் இன்றி மேலோட்டமாக பதியப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட நபரின்பேச்சைக்கேட்டு, இவ்வாறு வழக்குப்பதிவு செய்தால், வருங்காலங்களில் குற்றம்சாட்டப்படும் நபர்கள், எந்த விசாரணை அதிகாரி மீது வேண்டுமானாலும் புகார் கொடுத்து, இவ்வாறு வழக்குப் பதிவு செய்யலாமா? இது அமைப்பையே சீர்குலைக்காதா?. இவ்வாறு இருந்தால் அதிகாரிகள் எவ்வாறு நேர்மையாக, சுதந்திரமாக பணியாற்ற முன்வருவர்? பொன். மாணிக்கவேலின் முன் ஜாமீன் மனுவை ரத்து செய்யக்கோரி, சிபிஐ தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொன். மாணிக்கவேலை காவலில் எடுத்து விசாரிக்க வேண்டிய அவசியம் உள்ளதா?

முறையாக பணியாற்றும் அலுவலர்களை பாதுகாக்க வேண்டும். முறையான விபரங்களின்றி பதிவு செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு உகந்தது அல்ல. எனவே பொன்.மாணிக்கவேல் மீதான வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை வழக்கில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யக்கூடாது. பொன். மாணிக்கவேல் சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் அலுவலராக பொறுப்பேற்பதற்கு முன்பும், பின்பும் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? என்பது தொடர்பான விபரங்களை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும். அதோடு, சிபிஐ தரப்பில் கூடுதல் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிட்டு வழக்கை மார்ச் 17ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

# கொடநாடு வழக்கு ஜெயலலிதாவின் முதன்மை பாதுகாப்பு அதிகாரியிடம் விசாரணை



கோவை. மார்ச்.15

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக சிபிசிஐடி சிறப்பு விசாரணை குழு விசாரணையை தீவிரபடுத்தி உள்ளது. இந்நிலையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக இருந்த வீரபெருமாளை விசாரணைக்கு ஆஜராகும் படி சிபிசிஐடி போலீசார் சம்மன் அனுப்பி இருந்தனர். இதையடுத்து அவர் கடந்த செவ்வாய்க்கிழமை சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் போலீசார் 2 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடத்தினர். இதைத் தொடர்ந்து ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிசாமியின் முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக இருந்த ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள ஜம்பையை சேர்ந்த ஓய்வு பெற்ற கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு பெருமாள்சாமியை விசாரணைக்கு ஆஜராக சிபிசிஐடி போலீசார் சம்மன் அனுப்பியிருந்தனர். இதையடுத்து நேற்று காலை பெருமாள்சாமி கோவை காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் ஏடிஎஸ்பி முருகவேல் விசாரணை நடத்தினார்.

# முதல் முயற்சியில் மனைவி காப்பாற்றியும் சிறப்பு சப்.இன்ஸ்பெக்டர் தூக்கிட்டு தற்கொலை: கோவை வஉசி மைதானத்தில் பரபரப்பு



கோவை, மார்ச்.15

கோவை வஉசி மைதானத்தில் சிறப்பு எஸ்ஐ தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரை சேர்ந்தவர் சொக்கலிங்கம் (54). இவரது மனைவி கல்யாணி (54). இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். சொக்கலிங்கம் கோவை அடுத்த கோவைப்புதூரில் குடும்பத்துடன் தங்கி தீவிரவாத தடுப்பு பிரிவில் சிறப்பு எஸ்ஐயாக பணிபுரிந்து வந்தார். நேற்று முன்தினம் நள்ளிரவு சொக்கலிங்கம் வீட்டில் இருந்து மனைவியின் சேலையை எடுத்து கொண்டு வஉசி மைதானத்திற்கு வந்தார். அங்கு உள்ள புங்கை மரத்தில் சேலையால் திடீரென தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்து ரேஸ்கோர்ஸ் போலீசார் சொக்கலிங்கத்தின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்குப்பதிந்து அவர் எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என விசாரணை நடத்தினர்.

இதுகுறித்த போலீசார் கூறியதாவது: சொக்கலிங்கம் 1997ல் போலீஸ் பணியில் சேர்ந்துள்ளார்.

கடந்தாண்டு தீவிரவாத தடுப்பு பிரிவில் இன்ஸ்பெக்டருக்கு டிரைவராக நியமிக்கப்பட்டார்.

அங்கு ஒரு ஆண்டாக பணிபுரிந்து வந்தார். இரு மகள்களுக்கும் திருமணமாகிவிட்டது. அவருக்கு பணி சுமை எதுவும் கிடையாது.

கடந்த 8ம் தேதி நடந்த மகளிர் தினத்தில் கூட பாட்டுப் பாடி மகிழ்ச்சியாகத்தான் இருந்தார். நேற்று முன்தினம் அதிகாரிகளுடன் காரமடையில் உள்ள ஒரு திருமண நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பி, அறைக்குள் சென்ற அவர் திடீரென தூக்கு போட்டுள்ளார்.

அவரை மனைவி சமாதானம் செய்து மீட்டு உள்ளார். அதன் பின்னரே அவர் அலுவலகத்திற்கு சென்று வருவதாக கூறி வஉசி மைதானத்திற்கு வந்து தற்கொலை செய்துள்ளார். அவர் எதற்காக தற்கொலை செய்து கொண்டார்? என்பது குறித்து விசாரித்து வருகிறோம். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

# பத்திரப்பதிவுத் துறையில் 6 மாவட்ட பதிவாளர்கள், 2 டிஐஜிக்கள் பணியிட மாற்றம்: அரசு உத்தரவு

சென்னை, மார்ச்.15

பெரம்பலூர் நிர்வாக மாவட்ட பதிவாளர் மீரா மொஹிதீன் பாளையங்கோட்டை நிர்வாக மாவட்ட பதிவாளராகவும், பாளையங்கோட்டை நிர்வாக மாவட்ட பதிவாளர் சண்முக சுந்தரி திருநெல்வேலி தணிக்கை மாவட்ட பதிவாளராகவும், பெரம்பலூர் தணிக்கை மாவட்ட பதிவாளர் கோபாலகிருஷ்ணன் தாம்பரம் நிர்வாக மாவட்ட பதிவாளராகவும், கடலூர் தணிக்கை மாவட்ட பதிவாளர் செல்வகுமார் பழனி தணிக்கை மாவட்ட பதிவாளராகவும், பழனி தணிக்கை மாவட்ட பதிவாளர் ராணி பெரம்பலூர் தணிக்கை மாவட்ட பதிவாளராகவும், பழனி நிர்வாக மாவட்ட பதிவாளர் ஜெய்ப்பிரகாஷ் சேரன்மகாதேவிநிர்வாகமாவட்ட பதிவாளராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல தஞ்சாவூர் துணை பதிவுத்துறை தலைவர்ஆனந்த்,மதுரை துணை பதிவுத்துறை தலைவராகவும், திருநெல்வேலி துணை பதிவுத்துறை தலைவர் செந்தமிழ்செல்வன்தஞ்சாவூர் துணை பதிவுத்துறை தலைவராகவும் இடம் மாற்றப்பட்டுள்ளனர் என வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் குமார் ஜெயந்த பிறப்பித்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# மேலூர் ஊராட்சியில் அரசு நிலத்தை மீட்க வலியுறுத்தல்

பொன்னேரி, மார்ச்.15

மீஞ்சூர் ஒன்றியம் மேலூர் ஊராட்சியில் அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தை இடித்து வீடு கட்டி வரும் தனிநபர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மேலூர் ஊராட்சி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர் திருவள்ளூர் கலெக்டர் பிரதாப்பிடம் புகார் மனு அளித்தனர். மனுவில், மீஞ்சூர்ஒன்றியம்மேலூர் ஊராட்சி சீமாபுரம் செல்லும் வண்டிபாட்டை பகுதியில் கடந்த 2001ம் ஆண்டு முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் குப்புசாமி மூலம் அரசு நிதியில் இருந்து மண்புழு கிடங்கு அமைக்கப்பட்டது.

இந்நிலையில், மேலூர் ஜோசப் தெருவைச் சேர்ந்த தனிநபர் ஒருவர் கடந்த 2024ம் ஆண்டு ஜூலை மாதம் மண்புழு கிடங்கு கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் வீடு கட்டி வருகிறார். இதுதொடர்பாக அரசு அதிகாரிகளிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும், அரசுநிலத்தை ஆக்கிரமித்துள்ள தனிநபருக்கு வருவாய்துறை ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் உடந்தையாக உள்ளனர். எனவே, ஆக்கிரமிப்பு நிலம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். தனிநபர் கட்டி வரும் வீட்டை அகற்றி அரசு நிலத்தை மீட்கவேண்டும் என்று கூறியுள்ளனர்.

# திருவள்ளூர் புத்தகத் திருவிழா கவிஞர்களின் கருத்துரை



திருவள்ளூர், மார்ச்.15

திருவள்ளூர் புத்தகத் திருவிழாவின் 6ம் நாள் நிகழ்ச்சியாக சிந்தனை அரங்கத்தில் திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதியின் "பாட்டினைப் பேசுவோம்" என்ற தலைப்பிலும், கவிஞர் சுகிர்தாராணியின் "வாழ்கையை வாசித்தல்" என்ற தலைப்பிலும் கருத்துரை நடைபெற்றது. இதில், தனித் துணை கலெக்டர் (சபாதி) பாலமுருகன் தலைமை தாங்கி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்.

திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதி, கவிஞர் சுகிர்தாராணி ஆகியோரை மாவட்ட நிர்வாகம் சார்பாக சிறப்பு செய்தார். இதில் உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் ஜெகதீஷ் சந்திர போஸ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மோகன், உதவிஆணையர்(கலால்) கணேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் கண்ணன், கலெக்டர் அலுவலக பொது மேலாளர் சங்கிலிரதி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மீஞ்சூர் ஒன்றியத்தில் உள்ள அரசுப் பள்ளிக்கு கல்விசீர்



பொன்னேரி, மார்ச்.15

மீஞ்சூர் ஒன்றியம் ஆவூர் ஊராட்சி அரசுப் பள்ளியில், கல்வி சீர்வரிசை மற்றும் ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு, பள்ளி தலைமை ஆசிரியர் குமுதா தலைமை தாங்கினார். மீஞ்சூர் வட்டார கல்விஅலுவலர்வினோத்குமார் முன்னிலை வகித்தார். ஆசிரியை ஜெயகார்த்தி ஆண்டறிக்கை வாசித்து வரவேற்றார்.

எஸ்எம்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் சார்பில், பள்ளிக்கு கல்வி சீர் வழங்கப்பட்டது. இதையடுத்து, பள்ளிக்கு அதிக விடுமுறை எடுக்காமல் வந்த மாணவர்கள் மற்றும் தேர்வுகளில் முதலிடம், 2ம் இடம், 3ம் இடம் பிடித்த மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. இதையடுத்து, மாணவர்களின் கலைநிகழ்ச்சி மற்றும் பேச்சு, கட்டுரை, விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

முடிவில் ஆசிரியர் சண்முகநாதன் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி நிர்வாகம், ஆவூர் எஸ்எம்சி உறுப்பினர்கள் செய்திருந்தனர். நிகழ்ச்சியில், தலைமையாசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

# பொதட்டூர்பேட்டையில் 2வது முறையாக மார்க்கெட் ஏலம்



திருத்தணி, மார்ச்.15

பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் 2025 2026ம் ஆண்டிற்கான தினசரி மார்க்கெட், கட்டண கழிப்பிடம், பேருந்து நிலைய சுங்க வசூல் உரிமம் தொடர்பான பொது ஏலம் பேரூராட்சி அலுவலகத்தில் கடந்த மாதம் 20ம் தேதி நடைபெற்றது. குத்தகை உரிமம் ஏலத்தில் ரவி என்பவர் ரூ.16.10 லட்சத்துக்கு ஓர் ஆண்டுக்கான குத்தகை உரிமம் பெற்றார். பேருந்து நிலைய சுங்க வசூல் ரூ.4 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. இதில் குத்தகை உரிமம் பெற்றவர்கள் 18 சதவீதம் ஜிஎஸ்டியுடன் ஏலத்தொகையை முழுமையாக 24 மணி நேரத்தில் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும். இருப்பினும் ஏலம் எடுத்தவர்கள் பணம் செலுத்த தவறியதால், ஏலம் ரத்து செய்யப்பட்டு 2வது முறையாக நேற்று நடைபெற்றது. பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) ராஜகுமார் தலைமையில் நடைபெற்ற ஏலத்தில் வைப்புத்தொகை செலுத்தியவர்கள் ஏலத்தில் பங்கேற்றனர். தினசரி மார்க்கெட் ஏலத்தில் ரூ.11.77 லட்சத்திற்கு லிங்கம் என்பவர் குத்தகை உரிமம் பெற்றார். அதேபோல், வாகன சுங்கவரி வசூல் ஏலத்தில் ரூ.2.01 லட்சத்திற்கு மணி என்பவர் குத்தகை உரிமம் பெற்றார். பொது ஏலத்தையொட்டி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இதில், இளநிலை உதவியாளர் முருகவேல், பேரூராட்சி பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

# ஆவின் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து பால் உற்பத்தியாளர்களுக்கு கலெக்டர் அறிவுரை




திருவள்ளூர், மார்ச்.15

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் ஆவின் சார்பில் பால் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடந்தது. இதில், கலெக்டர் மு.பிரதாப் தலைமை தாங்கினார். ஆவின் பொது மேலாளர் நாகராஜன், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் ஜெகதீஷ் சந்திர போஸ், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் ஜெயந்தி, துணைப் பதிவாளர்(பால்வளம்) சித்ரா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் புதிய சங்கங்கள் ஆரம்பித்து செயலாளர்களை தேர்ந்தெடுப்பது, செயலிழந்த சங்கங்களை புதுப்பிப்பது, கால்நடைகளுக்கான தீவனங்கள் வளர்ப்பதை அதிகப்படுத்துவது, தனி நபருக்கு பால் வழங்குவதை முறைப்படுத்தி ஆவினுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், தரம் குறைவான பாலை உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பரிசோதித்து அதன் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

சங்க செயலாட்சியர்கள் அவர்களுக்கான இலக்குகளை தினந்தோறும் வாட்ஸ் அப் மூலம் அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும். பால் உற்பத்தியை பெருக்கி லாபகரமாக ஆவின் இயங்குவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என கலெக்டர் மு.பிரதாப் அறிவுறுத்தினார். இதில் ஆவின் அலுவலர்கள், சங்க செயலாளர்கள், செயலாட்சியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உரிய ஆவணமில்லாத ரூ.30 லட்சம் பறிமுதல்

திருவொற்றியூர், மார்ச்.15

கொத்தவால்சாவடி போலீசார் அப்பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சவுகார்பேட்டை பகுதியில் ஸ்போர்ட்ஸ் கடை நடத்தி வரும் ஒருவர் பைக்கில் வந்தார்.

அவரை மடக்கி விசாரணை செய்தபோது அவர் வைத்திருந்த பையில் ரூ.30 லட்சம் இருந்தது. அதற்கு உரிய ஆவணம் இல்லாததால் போலீசார் அதனை பறிமுதல் செய்து, நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். வருமான வரித்துறை அதிகாரிகள், அந்த பணத்தை பறிமுதல் செய்து, இது ஹவாலா பணமா அல்லது கணக்கில் வராத பணமா என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# திருக்கண்டலம் ஆனந்தவல்லி அம்பிகை கோயில் மாசி தெப்பத் திருவிழா : ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



பெரியபாளையம், மார்ச்.15

திருக்கண்டலம்ஊராட்சி, ஆனந்தவல்லி அம்பிகை சமேத திருக்கள்ளீஸ்வரர் கோயிலில் மாசி தெப்ப திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. பெரியபாளையம் அருகே, எல்லாபுரம் ஒன்றியத்தில் அடங்கிய திருக்கண்டலம் ஊராட்சியில் ஆனந்தவல்லி அம்பிகை சமேத திருக்கள்ளீஸ்வரர் கோயிலில் மாசி தெப்ப திருவிழா நடைபெற்றது.

இதில் சுந்தர விநாயகர், வள்ளிதெய்வானை சமேத முருகப்பெருமான் புறப்பாடு நடந்தது. மறுநாள் மாலை சுக்கிரவல்லி அம்பாள் புறப்பாடு நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் மாலை மடவிளாகம் கிராமத்தில் இருந்து தாய்வீட்டு சீதனமாக மஞ்சள், குங்குமம், வளையல், பூ, பழம், புடவை உள்பட பல்வேறு சீர்வரிசை பொருட்களை கிராம மக்கள் மேளதாளங்கள் முழங்க கோயிலுக்கு கொண்டு வந்தனர். பின்னர், அம்பிகை சமேதராக திருக்கள்ளீஸ்வரருக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. கோயிலின் எதிரில் உள்ள திருக்குளத்தில் வண்ணமலர்கள், மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் சுவாமி 9 முறை உலா வரும் தெப்பத் திருவிழா நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும், முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு, எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான மதன் சத்யராஜ் ஏற்பாட்டில், கோயில் வளாகத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனை எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் சத்தியவேலு தொடங்கி வைத்தார்.

இதில், ஒன்றிய பொருளாளர் குப்பன், மாவட்ட பிரதிநிதி வெங்கடாசலம், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் தியாகராஜன், நிர்வாகிகள் ஆனந்தன், சரண்ராஜ், முத்துராஜ், தினேஷ், அன்பு உள்பட ஆயிரக்கணக்கான கிராம மக்கள் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை மடவிளாகம், திருக்கண்டலம் கிராம பொதுமக்கள், பக்தர்கள், விழா குழுவினர்கள் செய்திருந்தனர்.

# பாட்டாளி மக்கள் கட்சியின் சித்திரை முழு நிலவு மாநாடு ஆலோசனைக் கூட்டம்

மதுராந்தகம், மார்ச்.15

செங்கல்பட்டு மாவட்டம் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் மற்றும் மாநிலத் தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆலோசனைப்படி அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சித்திரை முழு நிலவு மாநில மாநாட்டை இளைஞர்களின் பெருவிழாவாக கொண்டாடப்படுவது குறித்து சிறப்பு ஆலோசனை கூட்டம், மேல்மருவத்தூர் தனியார் விடுதியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு செங்கல்பட்டு தெற்கு மாவட்ட செயலாளர் மணப்பாக்கம் தே.சாந்தமூர்த்தி தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தின்போது ஒன்றிய, நகர, பேரூர் உள்ளிட்ட பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டுவது, சுவர் விளம்பரங்கள் எழுதுவது, பாமக சாதனைகள் குறித்த விளம்பர பதாகைகள் அமைப்பது, 10.5% சதவீதம் வன்னியர்களுக்கு உள் ஒதுக்கீட்டை தமிழக அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில், மதுராந்தகம் தொகுதி செயலாளர்கள் க.ப.லட்சுமி ஆனந்து, எ.ஐயப்பன், அச்சிறுப்பாக்கம் நகர செயலாளர் ஆ.வே.பக்கிரிசாமி, வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் பாக்சர் சு.சதீஷ் மற்றும் பாமக பொறுப்பாளர்கள் ஆதிகேசவன், மனோகரன், அர்ஜுனன், கண்ணன், முருகன், சந்தோஷ், விஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆர்.கே.பேட்டை அருகே இடிந்து விழும் நிலையில் நீர்த்தேக்க தொட்டி: சீரமைக்க வலியுறுத்தல்



ஆர்.கே.பேட்டை, மார்ச்.15

ஆர்.கே.பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட அய்யனேரி ஊராட்சியில் உள்ள அய்யனேரி காலனியில் 500 குடும்பங்களைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இங்குள்ள பொதுமக்களின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்டது. இந்நிலையில் நீர்த்தேக்க தொட்டியை தாங்கி நிற்கும் தூண்கள் சேதமடைந்து காணப்படுகிறது. தூணில் உள்ள சிமெண்ட் பெயர்ந்து உள்ளிருக்கும் கம்பிகள் வெளியே தெரிகிறது. இதனால் நீர்த்தேக்க தொட்டியின் தூண்கள் எப்போது வேண்டுமானாலும் உடைந்து விழும் அபாயம் இருப்பதாக ஊராட்சி நிர்வாகத்திடம் கிராம மக்கள் பலமுறை புகார் தெரிவித்தும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டும் அப்பகுதி மக்கள், அசம்பாவிதம் ஏற்படும்முன் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை சீரமைக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# பெரியபாளையம் அருகே துலுக்காணத்தம்மன் கோயில் கும்பாபிஷேக விழா



பெரியபாளையம், மார்ச்.15

பெரியபாளையம் அடுத்த ஆரணி போந்தவாக்கம் கிராமத்தில் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த கிராம தேவதையான துலுக்காணத்தம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்து கடந்த 10ம் தேதி கும்பாபிஷேக விழா கணபதி ஹோமத்துடன் தொடங்கியது. தொடர்ந்து, லக்ஷ்மி ஹோமம், நவகிரஹ ஹோமம், கோ பூஜை, யாகசாலை பூஜைகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பின்னர் வாஸ்து சாந்தி, இரண்டாம் கால யாக பூஜை, மருந்து சாற்றுதல், விக்னேஸ்வர பூஜை, இரண்டாம் கால யாக பூஜை, யாத்ராதானம், மகா பூர்ணாஹூதி, கலசங்கள புறப்பாடு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவின் முக்கிய நாளான நேற்று முன்தினம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித நீர் அடங்கிய கலசங்களை மேளதாளங்கள் முழங்க கோயிலை சுற்றி வலம் வந்து ராஜகோபுரத்தின் மீதுள்ள கலசங்களுக்கும், விமான கோபுரங்கள் மீது ஊற்றி அஷ்டபந்தனமகாகும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடத்தி வைத்தனர்.

பின்னர், அங்கு கூடியிருந்தபக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. தொடர்ந்து மூலவருக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் 1000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு கோயில் சார்பில் அன்னதான பிரசாதங்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள், கிராம பொது மக்கள் செய்திருந்தனர்.

# கதிர்வேடு நகர் பகுதிகளுக்கு தனியாக கிராம நிர்வாக அதிகாரி நியமிக்க வேண்டும்: பொதுமக்கள் கோரிக்கை

புழல், மார்ச்.15

புழல் அடுத்து கதிர்வேடு நகர் பகுதிகளுக்கு தனியாக கிராம நிர்வாக அதிகாரி நியமிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். மாதவரம் மண்டலம் 31வது வார்டில் புழல் அடுத்த கதிர்வேடு, எம்ஜிஆர் நகர், அறிஞர் அண்ணா நகர், ராகவேந்திரா நகர், மதுரா மேட்டுப்பாளையம், கலெக்டர் நகர், மகாலட்சுமி நகர், கட்டிட தொழிலாளர்கள் நகர், பத்மாவதி நகர், பிரிட்டானியா நகர், மூர்த்தி நகர், பாலாஜி நகர் உள்ளிட்ட பல்வேறு நகர் பகுதிகள் உள்ளன.

மேற்கண்ட பகுதிகளில் உள்ளவர்கள், பல்வேறு அரசு சம்பந்தமான சான்றிதழ் வாங்க குறிப்பாக சாதி, வருமானம், இருப்பிடம், வாரிசு உள்ளிட்ட சான்றிதழ்கள் பெறுவதற்கு கிராம நிர்வாக அதிகாரியை சந்திக்க 3 கிமீ தூரம் உள்ள சூரப்பட்டு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று மனு கொடுத்துவிட்டு வருகின்றனர்.

இதனால், பல்வேறு சிரமங்கள் ஏற்படுகிறது. குறிப்பாக, இதற்கு முன்பு கதிர்வேடு மற்றும் சூரப்பட்டு ஊராட்சியாக இருந்தபோது, மக்கள் தொகை குறைந்த அளவு இருந்ததால், இரண்டு ஊராட்சிகளுக்கும் சேர்த்து ஒரே ஒரு கிராம நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டு, சூரப்பட்டு கிராமத்தில் இதுநாள் வரை செயல்பட்டு வருகிறது.

தற்போது, புழல் அடுத்த கதிர்வேடு 31வது வார்டுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் மக்கள் தொகை அதிகளவில் உள்ளதால், கதிர்வேடு பகுதிக்கு குறிப்பாக 31வது வார்டுக்கு தனியாக கிராம நிர்வாக அதிகாரி நியமித்து, கதிர்வேடு பகுதியிலேயே செயல்படுத்த வேண்டுமென கதிர்வேடு கிராமம் மற்றும் பல்வேறு நகர் பகுதியில் உள்ள பொதுமக்கள், வார்டு கவுன்சிலர் சங்கீதாபாபுவை நேற்று நேரில் சந்தித்து கோரிக்கை மனு வழங்கினர்.

மனுவை பெற்றுக் கொண்ட அவர், சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டர், மாநகராட்சி ஆணையர், வருவாய்த்துறையினர் ஆகியோருக்கு தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

# UPI, RuPay பரிவர்த்தனைக்கு மீண்டும் MDR கட்டணம்: பழைய விதி மீண்டும் வருது! ஒன்றிய அரசு தகவல்

சென்னை, மார்ச்.15

2022ம் ஆண்டுக்கு முன்பு, UPI மற்றும் RuPay டெபிட் கார்டு பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது, வணிகர்கள் வணிக தள்ளுபடி விகிதம் (MDR) எனப்படும் சிறிய கட்டணத்தை வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. 2022ஆம் ஆண்டில் இந்தக் கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அவற்றை மீண்டும் கொண்டுவர இப்போது மத்திய அரசு திட்டமிடுகிறது. இப்போது, வாடிக்கையாளர்கள் செய்யும் UPI அல்லது RuPay டெபிட் கார்டு பரிவர்த்தனைகளுக்கு வணிக ர்கள் எந்தக் கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. MDR கட்டணங்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டால், அது UPI மூலம் பணம் செலுத்தும் வாடிக்கையாளர்களை நேரடியாகப் பாதிக்காது. ஆனால், அவர்கள் செலுத்தும் தொகையைப் பெறும் வணிகர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படும்.

இந்தக் கட்டணத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான முன்மொழிவை தொழில்துறை மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. தொடர்புடைய துறைகள் இப்போது இதை பரிசீலித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. ஏற்கனவே பெரிய வணிக நிறுவனங்கள் விசா, மாஸ்டர்கார்டு மற்றும் கிரெடிட்கார்டுகள்மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு MDR கட்டணத்தைச் செலுத்துகின்றன. இந்த நிறுவனங்கள் இனி UPI மற்றும் RuPay டெபிட் கார்டு பரிவர்த்தனைகளுக்கும் MDR கட்டணத்தைச்செலுத்தவேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அதிகமாக பயன்படுத்தப்படும் ஆன்லைன் பரிவர்த்தனைமுறையான UPIக்கு கட்டணம் செலுத்த வேண்டியிருந்தால் இந்தத் துறையில் உள்ள பல வணிக நிறுவனங்கள் லாபகரமாக இயங்குவது கடினமாகிவிடும் என்று நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஊரக வளர்ச்சி ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டம்

ஆர்.கே.பேட்டை, மார்ச்.15

ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், 21 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி ஒருநாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் 21 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி நேற்று மாநிலம் தழுவிய ஒருநாள் அடையாள வேலை நிறுத்த போராட்டம் நடந்தது. இதில் ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலர்கள் யாரும் வேலைக்கு வராமல் போராட்டம் நடத்தப்பட்டது. இதில், வளர்ச்சித்துறையில் காலியாக உள்ள ஊராட்சி செயலாளர் பணியிடங்கள் மற்றும் ஈப்பு ஓட்டுநர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் உள்ளிட்ட அனைத்து நிலை காலிப்பணியிடங்களையும் உடனே நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

# அரண்வாயலில் பள்ளிக்கு அருகே செல்போன் டவர் அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு

திருவள்ளூர், மார்ச்.15

திருவள்ளூர் அருகே அரண்வாயல் திருவிக தெரு பகுதியில் 300க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

இங்கு அங்கன்வாடி பள்ளி, அரசு பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் இதே பகுதியில் உள்ள ஆமைகுட்டை அருகே தனியார் செல்போன் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. குடியிருப்பு நிறைந்த பகுதியில் செல்போன் டவர் அமைத்தால் அதிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சால் பாதிப்பு ஏற்படும் என்பதால் தொடர்ந்து இதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் செல்போன் டவர் அமைக்கும் பணி நேற்று மீண்டும் தொடங்கப்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட முயன்றனர். இதுகுறித்து தகவல் அறிந்து வந்த பூந்தமல்லி உதவி ஆணையர் ரவிக்குமார், செவ்வாப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெய்கிருஷ்ணா ஆகியோர் பொதுமக்களை தடுத்து நிறுத்தி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் பொதுமக்களுக்கும் போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது பொதுமக்கள் தரப்பில், செல்போன் டவர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து வருவாய் கோட்டாட்சியர், கலெக்டர் ஆகியோருக்கு மனு அளித்துள்ளதாக தெரிவித்தனர். பொது மக்களிடம் எதிர்ப்பு வலுத்ததால் கலெக்டரை நேரில் சந்தித்து மீண்டும் மனு அளிக்குமாறு போலீசார் தெரிவித்தனர். இதனால் பொதுமக்கள் கலெக்டர் அலுவலகத்தில் செல்போன் டவர் அமைக்கும் பணியை நிறுத்த வேண்டும் என புகார் மனு அளித்தனர். அதன்படி தற்காலிகமாக பணிகளை நிறுத்தி வைக்க உத்தரவிட்டதையடுத்து பணிகள் நிறுத்தப்பட்டன.

# உங்களைத்தேடி உங்கள் ஊர் திட்டம் ஆர்.கே.பேட்டை வட்டம் தேர்வு

திருவள்ளூர், மார்ச்.15

திருவள்ளூர் கலெக்டர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழ்நாடு முதல்வர், மக்களை நாடி மக்கள் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத்தேடி உங்கள்ஊரில்" என்ற புதிய திட்டத்தினை அறிவித்தார்.




இந்த திட்டத்தின் படி ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும், பிரதி மாதம் ஒவ்வொரு மாதமும் 3வது புதன்கிழமை அன்று ஒருநாள் வட்ட அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் பேரில், "உங்களைத்தேடி உங்கள்ஊரில்" திட்டத்தின் படி மார்ச் மாதத்திற்கான கள ஆய்விற்கு வரும் 19ம் தேதி திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை வட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கூறியுள்ளார்.

# கொசஸ்தலை ஆற்றின் கரையை பலப்படுத்த போடப்பட்ட ரூ.10 கோடி வெள்ளத்தடுப்பு கான்கிரீட் தடுப்புச்சுவர் அடித்து செல்லப்பட்டது: பொதுமக்கள் குற்றச்சாட்டு

திருவள்ளூர், மார்ச்.15

கொசஸ்தலை ஆற்றின் கரையை பலப்படுத்தும் வகையில் ரூ.10 கோடியில் போடப்பட்ட வெள்ளத்தடுப்பு கான்கிரீட் தடுப்புச் சுவர் 4 மாதங்களில் அடித்து செல்லப்பட்டதாக அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர். சென்னையின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் திருவள்ளூர் பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் நிரம்பி உபரி நீர் திறக்கப்பட்டால் கொசஸ்தலை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுக்கும். அதன்படி கடைமடைப் பகுதியானபுதுநாப்பாளையம், விச்சூர், இடையஞ்சாவடி உள்ளிட்ட பகுதியின் வழியாக கடலில் கலக்கும்.



அதிகபட்சமாக கடந்த 2015ம் ஆண்டு 90,000 கனஅடிக்கும் அதிகமான உபரி நீர் திறக்கப்பட்டதால் திருவள்ளூர் தெற்கு, வட சென்னையின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. மேலும் பூண்டி நீர்த்தேக்கத்தில் வரும் வெள்ளநீர், கொசஸ்தலை ஆற்றின் கரையோரங்களில் அரிப்பு ஏற்படுத்தி அருகே வசிக்கும் கிராம மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டு கொசஸ்தலை ஆற்றின்கரையை பலப்படுத்தும் வகையில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தாலுகாவிற்கு உட்பட்ட கம்மவர்பாளையம், மடூர் அருகிலிருந்து வெள்ளிவயல் சாவடி வரை 9 கிமீ தூரத்திற்கு ரூ.9.10 கோடி செலவில் பருவமழைத் தடுப்பு திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு மார்ச் மாதம் டெண்டர் விடப்பட்டு அக்டோபர் மாதத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டன. பணிகள் முடிக்கப்பட்டு 4 மாதங்களிலேயே கரையை பலப்படுத்த போடப்பட்ட கான்கிரீட் தடுப்பு சுவர் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது : கொசஸ்தலை ஆற்றின் கரையை பலப்படுத்தும் வகையில் போடப்பட்ட வெள்ளத்தடுப்பு கான்கிரீட் தடுப்புச்சுவர் 4 மாதங்களில் அடித்து செல்லப்பட்டது. கரையை பலப்படுத்தும் வகையில் போடப்பட்ட பணிகள் விதிகளுக்குட்பட்டு கட்டப்படாமல், தரமற்ற சிப்ஷம் ப்ளாக்குகளை கொண்டும், ஆற்றின் உட்பகுதியிலேயே மண் எடுத்தும் கரையை பலப்படுதியதால் வலுவிழந்து, ஆற்றில் வந்த வெள்ளத்தில் கான்கிரீட் சுவர் சேதமடைந்தது.

மேலும் பல இடங்களில் போடப்பட்ட சிப்சம் ப்ளாக்குகளும் அடித்துச்செல்லப்பட்டுள்ளது. சுமார் 9 கிமீ தூரம் வரை கான்கிரீட் தடுப்பு சுவர் போட்டு கரையை திடப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட ரூ.9.10 கோடி நிதியில் சுமார் 800 மீட்டர் தூரம் மட்டுமே வேலை நடந்ததற்கான அடையாளம் மிஞ்சியுள்ளது. மற்றவை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டது. தரமான பணி நடக்கவில்லை. மேலும் அதிகாரிகளிடம்புகார்அளித்தும் கண்டு கொள்ளவில்லை. இவ்வாறு குற்றச்சாட்டு வைத்துள்ளனர்.

# டிரோல் செய்யப்பட்டாலும் தொடர்ந்து வைரலாகும் ஸ்ரீலீலா பட பாடல்



ஸ்ரீலீலாகதாநாயகியாகநடித்துள்ளபடம்ராபின்ஹுட். நிதின் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை வெங்கி குடுமுலாஎழுதி இயக்கி இருக்கிறார். ராஜேந்திரபிரசாத், ஷைன் டாம் சாக்கோ, வெண்ணேலா கிஷோர், மைம் கோபி உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படம் வரும் 28ம் தேதி வெளியாக உள்ளது.

ஜிவி பிரகாஷ் இசையமைக்கும் இப்படத்தின் முதல் பாடலான 'ஒன் மோர் டைம்' மற்றும் 2வது பாடலான 'வாட்டெவர் யூ கோ' சமீபத்தில் வெளியாகி வைரலாகின.

இதனைத்தொடர்ந்து, இப்படத்தின் 3வது பாடலான 'அதிதா சர்ப்ரைஸ்' என்ற பாடல் கடந்த 10ம் தேதி வெளியானது. இந்த சிறப்பு பாடலுக்கு பிரபல நடிகை கெட்டிகா ஷர்மா கவர்ச்சி நடனமாடியிருந்தார். இந்த பாடலில் அவரது நடனம் மிகவும் டிரோல் செய்யப்பட்டது. இருந்தபோதிலும் இணையத்தில் தொடர்ந்து வைரலாகி வருகிறது.

# சிக்கந்தர் படத்தின் 2வது பாடல்




ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் கதாநாயகனாக சல்மான்கான் நடித்துள்ள படம் 'சிக்கந்தர்' படத்தில். ராஷ்மிகா மந்தனா கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தை பிரபல தயாரிப்பாளர் சஜித் நதியத்வாலா தயாரிக்கிறார். இதன் மூலம் சல்மான்கான் 10 ஆண்டுகளுக்கு பிறகு தயாரிப்பாளர் சஜித் நதியத்வாலாவுடன் இணைந்து உள்ளார்.

இந்த படம் வரும் ரம்ஜான் பண்டிகைக்கு வெளியாக உள்ளது. சமீபத்தில் இப்படத்தின் முதல் பாடல் வெளியானநிலையில்,தற்போது2வதுபாடல்வெளியாகி இருக்கிறது. அதன்படி, 'பாம் பாம் போலே' என்ற இந்த பாடல் இணையத்தில் வைரலாகி வருகிறது.

தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான ஏ.ஆர். முருகதாஸ் தீனா, ரமணா, ரஜினி, கத்தி, துப்பாக்கி என பல வெற்றி படங்களை இயக்கி ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். இவர் தற்போது சிவகார்த்திகேயன் நடிப்பில் 'மதராஸி' எனும் திரைப்படத்தையும் இயக்கி வருகிறார்.

# பாலின பாகுபாடு இன்றி சம்பளம் வழங்கும் சமந்தா



கடந்த 2010ம் ஆண்டு திரைக்கு வந்த 'விண்ணைதாண்டி வருவாயா' படம் மூலமாக சினிமாவில் அறிமுகமானவர் சமந்தா. 'பானா காத்தாடி' படத்தின் ஹீரோயினாக எண்ட்ரி கொடுத்தார். அதனையடுத்து அவர் நடித்த படங்கள் அனைத்துமே வெற்றி படங்களாக அமைந்தன. இவர் தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கிலும் முன்னணி நடிகையாக வலம் வருபவர்.

இதற்கிடையில், நடிகை சமந்தா இயக்குனர் பிவி நந்தினி ரெட்டி இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளார். இப்படத்தை சமந்தா தனது திரிலாலா மூவிங் பிக்சர்ஸ் நிறுவனம் மூலம் தயாரிக்க உள்ளார். இவரது தயாரிப்பில் உருவாக உள்ள இந்த படத்தில் நடிக்கும் அனைவருக்கும் ஆண் பெண் பாலின பாகுபாடு இன்றி சம்பளம் வழங்க உள்ளார் சமந்தா. இது குறித்து இயக்குனர் நந்தினி ரெட்டி சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

அதாவது, நடிகர்களுக்கு இணையாக நடிகைகளுக்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இந்த விஷயத்தை நடிகை சமந்தா ஒரு தயாரிப்பாளராக முன்னெடுத்துள்ளார். இது இந்திய சினிமாவில் யாரும் செய்யாத விஷயமாகும். இதனால் சமந்தாவிற்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்: இந்திய அணி அந்த பிரச்சினையை சரி செய்ய வேண்டும் சித்து



இந்திய கிரிக்கெட் அடுத்ததாக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இந்த தொடர் வரும் ஜூன் 20ம் தேதி தொடங்க உள்ளது.

இந்நிலையில் இந்திய டெஸ்ட் அணியில் ஆல் ரவுண்டர்களுக்குபஞ்சம்இருப்பதுமிகப்பெரியபின்னடைவு என்று முன்னாள் வீரர் சித்து தெரிவித்துள்ளார். எனவே அதனை சரி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "அடுத்ததாக ஐ.பி.எல்.வரஉள்ளதுகவலைப்படவேண்டியவிஷயமாகும். அந்தத் தொடரில் இந்திய வீரர்கள் பெஞ்சில் அமர்ந்திருக்க யாரும் விரும்ப மாட்டார்கள். அதில் விளையாடிக் கொண்டிருக்கும் போதே திடீரென இங்கிலாந்து சுற்றுப்பயணம் வந்து விடும். அங்கே சூழ்நிலைகள் வட துருவத்திலிருந்து தென் துருவமாக மாறும். சூழ்நிலைகள் முற்றிலும் வித்தியாசமாக இருக்கும். இம்முறை ஜூன், ஜூலை மாதத்தில் தொடர் தொடங்குவதால் இங்கிலாந்தில் புற்கள், ஈரப்பதம் மற்றும் காற்று ஆகியவை அதிகமாக இருக்கும்.

வெள்ளைப்பந்து அணியை போல நமது டெஸ்ட் அணியில் மிடில் ஆர்டரில் ஆல் ரவுண்டர்கள் இல்லாதது மிகப்பெரிய பிரச்சினையாகும். அங்கே ஜடேஜா, பாண்ட்யா, அக்சர் படேல் ஒன்றாக இருப்பார்களா? ஜடேஜா மட்டுமே இருப்பார். அவரால் 4 5 விக்கெட்டுகளை எடுக்க முடியுமா? முடியாது. எனவே நீங்கள் பும்ரா, ஷமி, அர்ஷ்தீப் சிங், குல்தீப் போன்றவர்களை சார்ந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் யாருக்கும் பேட்டிங் செய்ய தெரியாது என்பது பிரச்சினையாகும். இதை இந்தியா சரி செய்ய வேண்டும்" என்று கூறினார்.

# சாம்பியன்ஸ் டிராபி: இந்திய அணியின் வெற்றிக்கான காரணம் என்ன..? ஆஸி.முன்னாள் கேப்டன் விளக்கம்

பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடைபெற்ற 9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. அதிலும் குறிப்பாக தோல்வியே சந்திக்காமல் வெற்றி பெற்று அசத்தியது. இதனால் இந்திய அணியை பல தரப்பினரும் பாராட்டி வருகின்றனர். கடைசியாக 2013ம் ஆண்டு தோனி தலைமையில் சாம்பியன்ஸ் டிராபியை வென்ற இந்தியா, தற்போது ரோகித் தலைமையில் மீண்டும் வென்று சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில் இந்த சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்திய அணி வெற்றி பெற்றதற்கு என்ன காரணம்? என்பது குறித்து முன்னாள் வீரர்கள் பலரும் தங்களது கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் ஆஸ்திரேலியா அணியின் முன்னாள் கேப்டனான ரிக்கி பாண்டிங் இந்திய அணி இந்த சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை கைப்பற்ற தரமான ஆல் ரவுண்டர்கள் இருந்ததே காரணம் என்று தெரிவித்துள்ளார். இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "இந்திய அணியில் இடம் பிடித்துள்ள வீரர்கள் அனைவருமே இந்த தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக ஆல்ரவுண்டர்கள் இந்த தொடரில் அற்புதமாக செயல்பட்டனர். ஜடேஜா, அக்சர் படேல், ஹர்திக் பாண்ட்யா போன்ற அனுபவமும் இளமையும் வாய்ந்த ஆல் ரவுண்டர்கள் இருந்ததால் இந்திய அணியின் பலம் அதிகரித்தது. பேட்டிங் மற்றும் பந்துவீச்சு என இரண்டிலும் கை கொடுக்கும் அந்த மூன்று பேர் இருந்தது இந்திய அணியின் ஆழத்தை அதிகரித்ததோடு சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை கைப்பற்றவும் மிக முக்கியமான காரணமாக மாறியது" என்று கூறினார்



NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.